# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 47

**2 மதிப்பெண் வினாக்கள்**

11 x 2 = 22

1) இந்தியாவின் பாரம்பரிய கைவினை பொருட்களின் தொழிற்சாலைகள் யாவை?

**பதில் :** நெசவு, மரவேலை, தந்தம், மதிப்பு மிக்க கற்களை வெட்டுதல், தோல், வாசனை மரங்கள், உலோக வேலை மற்றும் நகைகள் ஆகிய பாரம்பரிய தொழில் துறைகளில் இந்தியா மிகவும் புகழ் பெற்று விளங்கியது

2) செல்வச் சுரண்டல் கோட்பாடு பற்றி எழுதுக.

**பதில் :** ஆங்கிலேயர்கள் இந்தியாவின் வளங்களை சுரண்டுவதும் இந்தியாவின் செல்வங்களை பிரிட்டனுக்கு கொண்டு செல்வதும் இந்திய மக்களின் வறுமைக்கு காரணம் என்பதை முதலில் ஏற்றுக் கொண்டவர் தாதாபாய் நௌரோஜி ஆவார். இதுவே செல்வச் சுரண்டல் கோட்பாடு என்பதாகும்.

3) பெரிய அளவில் நெசவு உற்பத்திக்கு பயன்படுத்திய கண்டுபிடிப்புகளின் பெயர்களை எழுது.

**பதில் :** இங்கிலாந்தில் காட்டன் ஜின், பறக்கும் எரிநாடா, நூற்கும் ஜென்னி மற்றும் இங்கிலாந்தின் நீராவி இயந்திரம் ஆகியவை நெசவு உற்பத்தியை பெரிய அளவில் உருவாக்கியது.

4) இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (CII) பற்றி சிறுகுறிப்பு எழுது.

**பதில் :** இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு என்பது இந்தியாவில் உள்ள ஒரு வணிக சங்கம் ஆகும். இது 1985ல் நிறுவப்பட்டது. தனியார் மற்றும் பொதுத்துறைகளை உள்ளடக்கிய சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் (SME) இருந்தும் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் (MNC) இருந்தும் 9,000 உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.

5) தொழில்மயம் அழிதல் என்றால் என்ன?

**பதில் :** பாரம்பரிய இந்திய கைவினை தொழிலுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயல்பாடு மற்றும் தேசிய வருமானத்தின் வீழ்ச்சி ஆகியன தொழில்மயமழிதல் என குறிப்பிடப்படுகிறது.

6) தொழிலக வகைப்பாடு பற்றி விவரி.

**பதில் :** (i) மூலப்பொருட்களின் அடிப்படையில் தொழில்களை வேளாண் அடிப்படையிலானவை மற்றும் கனிம அடிப்படையிலானவை என வகைப்படுத்தலாம்.
(ii) தொழிலகங்கள் அவைகளின் பங்களிப்பின்படி அடிப்படை தொழில்கள் மற்றும் முக்கிய தொழில்கள் எனவும் வகைப்படுத்தலாம்.
(iii) தொழில் உரிமத்தின் அடிப்படையில் பொதுத்துறை, தனியார் துறை மற்றும் கூட்டுறவுத் துறை என தொழிலகங்களை வகைப்படுத்தலாம்.

7) கைவினைத் தொழில்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என்ன?

**பதில் :** நவீன தொழிற்சாலையின் அதிகமான வேலைவாய்ப்புகளும் வருமானம் ஈட்டும் விளைவுகளும் கைவினைத் தொழில் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

8) 1956 ஆம் ஆண்டு தொழில்துறை கொள்கை தீர்மானத்தின் படி தொழில்துறையானது எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது?

**பதில் :** 1956 ஆம் ஆண்டு தொழில்துறை கொள்கை தீர்மானத்தின்படி தொழில்துறையானது மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை : 1**

(i) இவ்வகையான தொழிற்துறைகளை அரசாங்கம் மட்டுமே நிர்வகிக்கும்.

(ii) அவற்றுள் சில அணுசக்தி, மின்னணு இரும்பு மற்றும் எஃகு ஆகியவை அடங்கும்.

**அட்டவணை : 2**

(i) இவைகள் சாலைகள் மற்றும் கடல் போக்குவரத்து, இயந்திரக் கருவிகள், அலுமினியம், நெகிழி மற்றும் உரங்கள்

(i) [illegible]
உள்ளிட்ட ரசாயனங்கள், இரும்பு கலவை மற்றும் குறிப்பிட்ட வகையான சுரங்கங்கள் ஆகியவை அடங்கும்.

**அட்டவணை : 3**

(i) இந்த வகையின் கீழ் மீதமுள்ள தொழில்கள் மற்றும் தனியாருக்கு விடப்பட்ட துறைகள் ஆகியவை அடங்கும்.

9) தொழிற்துறை வளர்ச்சி. (1980 - 1991) பற்றி விவரி.

**பதில் :** (i) 1980 களின் காலகட்டத்தை தொழிற்துறையின் மீட்பு காலமாகக் கருதலாம்.
(ii) ஏனெனில் இந்தக் காலத்தில் தொழிற்துறை மிகவும் வளமான வளர்ச்சியைக் கண்டது.

10) டாக்காவின் மஸ்லின் ஆடைகள் குறிப்பு எழுதுக.

**பதில் :** 1. கி.மு 2000ஆம் ஆண்டு முதல் எகிப்திய கல்லறைகளில் உள்ள மம்மிகளில் மிகச் சிறந்த தரம் வாய்ந்த இந்திய மஸ்லின் ஆடைகள் கொண்டு மூடப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
2. 50 மீட்டர் அளவு கொண்ட மெல்லிய இந்த மஸ்லின் துணியை ஒரு தீப்பெட்டிக்குள் அழுத்தி வைத்து விடலாம். டாக்காவில் தயாரிக்கப்பட்ட மஸ்லின் ஆடைகள் உலகப் புகழ் பெற்றது.

11) TISCO [டாட்டா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம்] குறிப்பு வரைக.

**பதில் :** 1907 ஆம் ஆண்டு ஜாம்ஷெட்பூர் என்ற இடத்தில் டாட்டா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் 1911ஆம் ஆண்டு தேனிரும்பு மற்றும் 1912ஆம் ஆண்டு உலோக வார்ப்பு கட்டிகளையும் உற்பத்தி செய்தது.

**<u>5 மதிப்பெண் வினாக்கள்</u>** 5 x 5 = 25

12) இந்தியத் தொழில்மயம் அழிதலுக்கு பிரிட்டிஷாரின் வர்த்தகக் கொள்கை எவ்வாறு காரணமானது?

**பதில் :** 1. இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட்ட அனைத்து கொள்கைகளும் இந்திய உள்நாட்டு தொழில்களின் மீது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.
2. கிழக்கிந்திய கம்பெனியால் பின்பற்றப்பட்ட தடையில்லா வாணிபக் கொள்கை, இந்திய வர்த்தகர்கள் தங்கள் பொருட்களை சந்தை விலைக்கு குறைவாக விற்க கட்டாயப்படுத்தியது.
3. இது பல கைவினைஞர்கள் தங்கள் மூதாதையர்கள் காலம் தொட்டு செய்து வந்த கைவினை திறமைகளை கைவிட கட்டாயப்படுத்தியது.
4. கிழக்கிந்தியக் கம்பெனியின் நோக்கம் மலிவான விலையில் இந்திய தயாரிப்பு பொருட்களை பெருமளவிற்கு வாங்கி மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு பெரும் லாபத்திற்கு விற்க வேண்டும் என்பதாகும்.
5. இது இந்தியப் பாரம்பரிய தொழில்களை வெகுவாக பாதித்தது.
6. பிரிட்டனுக்கு கொண்டு செல்லப்பட்ட பொருட்களுக்கு கடுமையான வரி விதிக்கப்பட்டது. அதே நேரத்தில் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட ஆங்கிலேயர் பொருட்களுக்கு பெயரளவில் மட்டுமே வரி விதிக்கப்பட்டன.

13) தோட்டத் தொழில்கள் பற்றி விரிவாக எழுதுக.

**பதில் :** 1. தோட்டத் தொழில் முதன் முதலில் ஐரோப்பியர்களை ஈர்த்தது. பெருந்தோட்டத் தொழில் பெரிய அளவில் வேலைகளை வழங்கமுடியும் என்றாலும், உண்மையில் இது பிரிட்டிஷ் சமுதாயத்தால் அதிகரித்து வரும் தேநீர், காபி மற்றும் கருநீலச்சாயம் (இண்டிகோ) ஆகியவற்றிற்கான தேவைகளை பூர்த்தி செய்ய முடிந்தது. எனவே தோட்டத் தொழில் ஆரம்பத்திலேயே தொடங்கப்பட்டது.
2. அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் 1839ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தேயிலைத் தோட்டம் கிழக்கிந்தியப் பகுதிகளில் மிக முக்கியமான தொழிலாக இருந்தது போல் காபி தோட்டம் தென்னிந்தியாவின் நடவடிக்கைகளின் மையமாக மாறியது.
3. மூன்றாவது முக்கிய தோட்டத் தொழிலான சணல் பல தொழிற்சாலைகள் உருவாக வழிவகுத்தது. இந்த தொழில்கள் அனைத்தும் பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தின் முன்னாள் ஊழியர்களால் கட்டுப்படுத்தப்பட்டன.

14) 1991 ஆம் ஆண்டு சீர்திருத்தங்களுக்குப் பிறகு தொழிற்துறையின் வளர்ச்சியை விளக்குக.

**பதில் :** 1991 ஆம் ஆண்டு பொருளாதார சீர்திருத்ததிற்கு பின்னர் தொழிற்துறை வளர்ச்சி
1. 1991 ஆம் ஆண்டு பொருளாதார தாராளமயமாக்கல் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது. தொழிற்துறையின் செயல்திறனை மேம்படுத்த இந்தியா ஒரு முக்கிய முடிவை எடுத்தது.
2. பத்தாவது மற்றும் பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டங்கள் தொழிற்துறை உற்பத்தியில் உயர் வளர்ச்சி விகிதத்தைக் கண்டன.
3. தொழிற்துறை உரிமத்தை ஒழித்தல், விலைக்கட்டுப்பாடுகளை நீக்குதல், சிறுதொழில்களின் இட ஒதுக்கீட்டை நீர்த்து போகச் செய்தல் மற்றும் ஏகபோக சட்டத்தின் மாயயை ஒழித்தல் ஆகியவை இந்திய தொழிற்துறை செழிக்க உதவியது. புதிய பொருளாதார கொள்கை வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்கிறது.

15) எவ்வாறு கைவினைப் பொருட்களும், இயந்திர தயாரிப்பு பொருட்களும் வேறுபடுகின்றன .

**பதில் :**

| எண் | கைவினைப்பொருட்கள் | இயந்திர தயாரிப்பு பொருட்கள் |
|---|---|---|
| 1. | நெசவு, மரவேலை, தந்த வேலை, மதிப்பு மிக்க கற்களை வெட்டுதல், தோல், வாசனை மரங்களில் வேலைபாடுகள் செய்தல், உலோக வேலை மற்றும் நகைகள் செய்தல் ஆகியவை இந்தியாவின் கைவினைப்பொருட்கள் ஆகும். | சணல், பருத்தி ஆலைகள், காகிதம், கம்பளி மற்றும் தோல் பொருட்கள் \| இயந்திரத்தினால் செய்த பொருட்களாகும். |
| 2. | இப்பொருட்கள் செய்வதற்கு குறைந்த உற்பத்தி \| செலவு ஆகும். | இப்பொருட்கள் செய்வதற்கு அதிக உற்பத்தி செலவு ஆகும். |
| 3. | இதன் தொழில்நுட்பம் மிகவும் பழமையானது. | இதன் தொழில்நுட்பம் புதுமையானது. |
| 4. | அதிக நேரம் பொருட்கள் தயாரிக்க செலவிடப்படும் | குறைவான நேரம் பொருட்கள் தயாரிக்க செலவிடப்படும். |

16) 1900 - 1950 வரை உள்ள ஏதேனும் 5 நிகழ்வுகளை எழுதுக.

**பதில் :**

